**Previous Examination date – 02.07.2025**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 279 of 2025**

**Deposition of Witness P.W.6**

| | |
|---|---|
| **Name : டாக்டர்.சண்முக ராஜேஸ்வரன்** | **Father/Husband's Name : முருகானந்தம்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 09.07.2026.**

**Accused absent. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் கடந்த 2011ம் வருடம் பழனி அரசு மருத்துவமனையில் குடிமையியல் மருத்துவராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 11.04.2008ம் தேதியன்று காலை 9.40 மணியளவில் பழனியம்மாள் என்பவர் தன்னை தெரிந்த நபர்கள் தாக்கியதாக கூறி அரசு மருத்துவமனைக்கு வந்தவரை முதலுதவி சிகிச்சையளித்து உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு வலது முன் கையில் ஒரு வீக்க காயம் இருந்தது. வயிற்றில் வலி இருந்ததாக கூறினார். முதுகிலும் வலி இருந்ததாக கூறினார். அவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து சாதாரண காயம் என சான்று அளித்தேன். **விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று அ.சா.ஆ.4 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. மேற்படி விபத்து பதிவேட்டில் புகார்தாரரை மருத்துவமனைக்கு கொண்டு வந்தவர் பெயர் குறிப்பிடவில்லை என்றால் போலிஸ் மெமோவுடன் காயம்பட்ட நபர் வந்திருந்தார். அந்த போலிஸ் மெமோவை போலிஸ் கொண்டு வந்து கொடுத்தாரா என்றால் இல்லை, காயம்பட்டவர் கொண்டு வந்தார். சம்பவம் நடந்த அன்று காயம்பட்டதாக சொல்லும் நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றால் 10.04.2008ம் தேதி சம்பவம் நடந்ததாக சொல்லி 11.04.2008ம் தேதி சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார். போலிஸ் மெமோ யாரிடம் இருந்து பெறப்பட்டது என்று மருத்துவ ஆவணங்களில் இருக்குமா என்றால் ஆமாம், போலிஸ் மெமோ விபரம் மருத்துவ

பதிவேட்டில் குறிப்பிடப்படும். பொதுவாக வாய்க்கால் வரப்புகளில் கீழே விழும்போது மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.09 17:46:34 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date – 02.07.2025**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 279 of 2025**

**Deposition of Witness P.W.7**

| | |
|---|---|
| **Name : ராமசந்திரன்** | **Father/Husband's Name : வெங்கிடுசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 09.07.2026.**

**Accused absent. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கரடிகூட்டத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தாதநாயக்கன்பட்டியில் VAO வாக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். என்னிடம் காட்டப்படும் கடிதம் எண்.11.04.2008 தேதியிட்ட சர்வே எண்.60/4E–1.20.0 புஞ்சை பட்டா எண்.119–ன் படி சின்னசாமி கவுண்டர் மகன் தங்கராஜ் பெயரில் மேற்படி யாருக்கு பாத்தியப்பட்டது என சான்று அளித்தேன். மேலும் 54/E என்ற புல எண் எதுவும் இல்லை என்பதையும் அந்த சான்றில் சொல்லியுள்ளேன். 07.05.2008 தேதியிட்ட சான்று வழங்கினேன். **07.05.2008 தேதியிட்ட VAO சான்று அ.சா.ஆ.5 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. தாதநாயக்கன்பட்டி கிராமத்தில் எந்த வருடம் முதல் எந்த வருடம் வரை பணி செய்தேன் என்றால் நான் பொறுப்பில் இருந்தேன், சுமார் இரண்டு வருடங்கள் அங்கு வேலை பார்த்திருப்பேன். புகார்தாரரும், எதிரியும் மனு கொடுத்து நான் அளவை செய்து கொடுத்தேனா என்றால் நான் இடத்தை பார்த்துள்ளேன், அளவீடு செய்வது சர்வேயர் தான் செய்வார். இந்த வழக்கில் சொல்லியுள்ள பிரச்சனைக்கு முன்பு அளவீடு செய்யப்பட்டதா என்றால் அளவீடு செய்யப்படுவது பற்றி சர்வேயருக்கு தான் தெரியும். நான் மேற்படி இடத்தை பார்த்த சமயத்தில் சர்வேயர் அந்த இடத்தில் இருந்தாரா என்றால் பிரச்சனையை சொன்னபோது நான் போய் பார்த்தேன், நான் பார்த்தபோது சர்வேயர் என்னுடன் இல்லை. வண்டி பாதையை எப்போது களஆய்வு செய்தேன் என்றால் 2008ம் ஆண்டு செய்தேன். அவ்வாறு களஆய்வு செய்தபோது என்னுடன் அதிகாரி யாரும் இருந்தாரா என்றால் அதிகாரி இல்லை, இரண்டு தரப்பும் தகராறு செய்து கொண்டிருந்தார்கள், நான் அந்த

இடத்தை பார்த்துவிட்டு அது வாய்க்காலின் கரை அதனால் தடுக்காதீர்கள் என்று சொன்னேன். நான் சம்பவயிடத்தை பார்வையிட்டு உரிமையாளர் பற்றி சான்று கொடுத்தேன் என்றால் வருவாய் ஆவணங்களை பார்த்து அந்த புல எண்ணுக்கு சான்று வழங்கினேன். என்னுடைய சான்றில் சர்வே எண்.60/4E என்ற நிலத்திற்கு நான்கு மால்கள் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். நான் வழங்கிய சான்றில் சர்வே எண்.54/1 வாய்க்கால்(புறம்போக்கு) என்றும், 54/3 வாய்க்கால்(புறம்போக்கு) என்றும், 54/2 பொதுப்பணித்துறை வாய்க்கால்(புறம்) என்றும் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். சர்வே எண்.60/E என்ற நிலம் மேற்படி சர்வே எண்.54/1,54/2,54/3 ஆகிய இடங்களுக்கு எந்த திசையில் உள்ளது என்றால் அது எனக்கு தற்போது ஞாபகமில்லை. மேற்படி வாய்க்கால் செங்குளம் வாய்க்கால் என்றால் புதுகுளம், இடைய மங்கலம், செங்குளம் ஆகிய ஊர்களுக்கு உள்ள வாய்க்கால். மேற்படி வாய்க்கால் எத்தனை அடி அகலம் கொண்டது என்றால் அது என்னால் சரியாக குறிப்பிட்டு தற்போது சொல்ல இயலவில்லை, ஆவணங்கள் உள்ளது. அந்த வாய்க்காலின் கரைகள் எத்தனை அடி அகலம் கொண்டது என்றால் அது என்னால் சரியாக குறிப்பிட்டு தற்போது சொல்ல இயலவில்லை, ஆவணங்கள் உள்ளது. மேற்படி வருவாய்துறை ஆவணங்களை புலன் விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்திருக்கிறேன். நான் மேற்படி நிலத்தை பார்வையிட சென்றபோது ஏன் நில அளவையரை கூப்பிட்டு செல்லவில்லை என்றால் அளவீடு செய்வது சர்வேயர் வேலை, நான் போய் பார்த்தேன். 11.04.2008ம் தேதியன்று சார்பு ஆய்வாளர் கடிதம் கொடுத்த பின்பு நான் எந்த தேதியில் சான்று கொடுத்தேன் என்றால் 07.05.2008ம் தேதி கொடுத்துள்ளேன். நான் சம்பவயிடத்திற்கு பாத்தியப்பட்ட உரிமையாளர் பற்றிய விபரத்திற்கு சான்று வழங்கினேன் என்றால் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் பட்டா படி யார் பெயரில் உள்ளது என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய 07.05.2008ம் தேதியிட்ட சான்றில் நான்குமால் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்திற்கு காவல் அதிகாரி அழைத்ததன்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.09 17:46:42 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.